செ.வெ.எண்:5 நாள்: 06.08.2018

**கோயம்புத்தூர் மாவட்டம், வட்டாட்சியர் அலுலகத்தில் நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் கணினி பதிவேற்றுநர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கோயம்புத்தூர் மாவட்டம், வட்டாட்சியர் அலுலகத்தில் நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் இரண்டு கணினி பதிவேற்றுநர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ. 10000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) என்ற தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணிபுரிய, இரண்டு தற்காலிக கணினி பதிவேற்றுநர் (Data Entry Operator) பணியிடத்திற்கு தகுதியான நபர் தேர்வு செய்யப்படவுள்ளனர். இந்த தற்காலிக பணியிடத்திற்கு வேலைவாய்ப்பகம் பரிந்துரை செய்யும் நபர்களைத்தவிர கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் இதர தகுதியுள்ள நபர்கள் வயது சான்று, கல்வி சான்று, சாதிச்சான்று ஆகியவற்றுடன் உதவி இயக்குநர், மாவட்ட நில அளவை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை-18 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக 17.08.2018க்குள் விண்ணப்பிக்க வேண்டும். இனசுழற்சி முறைப்படி பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) முன்னுரிமையற்றவர்(Non priority), ஒதுக்கீடு பொதுப்பிரிவில் ஒரு காலிப்பணியிடமும், பொதுப்போட்டி(Non priority)(முன்னுரிமையற்றவர்) ஒதுக்கீடு பொதுப்பிரிவில் ஒரு காலிப்பணியிடமும், என இரண்டு தற்காலிக கணினி பதிவேற்றுநர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். குறைந்த பட்ச கல்வித்தகுதி 10 ஆம் வகுப்பு தேர்ச்சி, தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சில் தேர்ச்சியுடன், கணினி இயக்குவதற்குரிய அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும், **01.07.2017** அன்று 32 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். கடைசி நாளுக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரிந்துரை அளிப்பவர்கள் இந்த பணிக்கு தகுதியிழப்பு செய்யப்படுவார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**